செ.வெ.எண்.21 நாள்.08.12.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் மாநில நில நிர்வாக ஆணையர் திரு.மோகன் பியாரி,இ.ஆப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் மாநில நில நிர்வாக ஆணையர் திரு.மோகன் பியாரி,இ.ஆப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (08.12.2017) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் மாநில நில நிர்வாக ஆணையர் அவர்கள், வருவாய்த் துறை தொடர்பான இலவச வீட்டுமனைப்பட்டா, நிலம் பெயர் மாற்றம், நில எடுப்பு மற்றும் குத்தகை தொடர்பான விவரங்கள், நிலுவையில் உள்ள கோப்புகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், நீதிமன்ற நிலுவை இணங்கள், பட்டா மாறுதல், அரசு நில பதிவேடு, ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் தணிக்கை தடை தொடர்பான விவரங்களையும், நிலுவையில் உள்ள கோப்புகள் தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார். நிலுவையிலுள்ள கோப்புகளை விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.